


அரசியலில் இரண்டு எதிரெதிர் துருவங்கள், ஏதோ ஒரு காரணத்தால் நட்புக்கொள்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் நண்பர்கள், இதயத்தில் கண்டிப்பாக இடம் உண்டு என்று சொன்னால் மட்டும் உறவு நிலைக்குமா? தேர்தலில் கூட்டணி வைத்து, சுமுகமாகத் தொகுதிப் பங்கீடு செய்ய முடிந்தால் அல்லவா நட்பு அங்கீகரிக்கப்படும்?

இதே மாதிரியான ஒரு கோரிக்கையைத்தான், சூடான் மாநாட்டுக்கு வந்த ஓர் ஈரானிய தீவிரவாதக் குழு அல் காயிதாவிடம் முன்வைத்தது.

"எல்லாம் சரிப்பா. நான் ஷியா. நீ சன்னி. ஆனா நாம ரெண்டு பேரும் முஸ்லிம். பொது எதிரிதான் நம்ம குறிக்கோளா இருக்கணும்ங்கறத நானும் ஏத்துக்கறேன். ஆனா, நாம சேர்ந்து வேலை செய்யவேணாமா? நீ பாட்டுக்கு உன் ரூட்ல பாம் போடுவ. நான் பாட்டுக்கு என் ரூட்ல கண்ணிவெடி வெப்பேன். எங்க ஏரியா, உள்ளே வராதேன்னு சொல்லாம இருக்கணும்னா... நம்ம நட்புக்கு ஒரு அடையாளம் வேணாமா? உன் தரப்புல நீ ஒரு கல்லைத் தூக்கி வை. என் தரப்புல நான் ஒரு வூடு கட்டிக் காட்டறேன்" என்று, அப்போது யாரும் எதிர்பாராவிதத்தில் ஒசாமாவிடம் ஒரு கோரிக்கை வைத்த அந்த ஈரானிய அமைப்பின் பெயர், Islamic Republic of Iran.

அல் காயிதா, ஹமாஸ், ஹெஸ்புல்லாவுக்கு அடுத்தபடி மிகத் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் இயக்கம். இதில் விசேஷம் என்னவென்றால், அதற்குமுன் அல் காயிதா நீங்கலாக, மத்தியக் கிழக்கில் இருந்த அத்தனை தீவிரவாத இயக்கங்களுடனும் இந்த ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்புக்கு, மிக நெருக்கமான தொடர்புகள் இருந்தன. பிராந்தியத்தில் குறிப்பிடத்தகுந்த தாதா என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்பு இப்படி ஒரு கோரிக்கையை வைத்ததும், வேறு பல குட்டி இயக்கங்களும் அதை உடனடியாக ஆமோதித்தன. அல் காயிதாவுக்கு ஷியா, சன்னி பாகுபாடு இல்லை என்பதை நிரூபிக்கும் விதமாக, ஏதாவது ஒரு காரியம் செய்தே ஆகவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் என்றே இதனைச் சொல்லலாம்.

ஒசாமா, துராபியுடன் கலந்து ஆலோசித்தார். அவர் முன்வைத்த நட்புத்திட்டம் இதுதான். ஈரானிய ஷியா இயக்கங்களை அல் காயிதா மதிக்கிறது; நட்புக்கொள்ள விரும்புகிறது என்பதன் அடையாளமாக, சில நூறு அல் காயிதா போராளிகள், பயிற்சிக்காக ஈரானுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். அதாவது, புதிய போராளிகள். அவர்கள் ஈரானில் சுமார் ஒரு வருடகாலம் தங்கி, ஆயுதப் பயிற்சி பெறுவதற்கு ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் பொறுப்பு. அவர்களது தோழமை இயக்கங்களும் இதற்குப் பொறுப்பு.

இதற்குப் பிரதி உபகாரமாக, ஈரான் தீவிரவாத அமைப்புகள் அனைத்துக்கும் அல் காயிதா ஆயுத உதவிகள் செய்யும்.

அசந்துபோய்விட்டார்கள் ஈரானியர்கள். எப்பேர்ப்பட்ட வாய்ப்பு! ஆயுத உதவி என்பதை அவர்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. தொண்ணூறுகளின் தொடக்க வருடங்களில், அல் காயிதாவிடம் இருந்த ஆயுத பலத்தில் நான்கில் ஒரு பங்கு கூட, ஏனைய அனைத்து இயக்கங்களிடமும் இருப்பதைச் சேர்த்தால் தேறாது. தவிரவும், துராபியின் சில குள்ளநரித்தனங்களால், சோவியத் யூனியனிலிருந்து சிதறிய பல தேசங்களின் ராணுவத்திலிருந்து ஏராளமான ஆயுதங்களும் ரகசியமாக 'விலைக்கு வாங்கப்பட்டு' அல் காயிதாவிடம் அளிக்கப்பட்டிருந்தன. இது தவிர, ரஷ்ய மாஃபியாக் கூட்டங்களும் அல் காயிதாவுக்கு ரெகுலராக ஆயுத சப்ளை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மாதம் மும்மாரி பொழிந்துகொண்டிருந்தார்கள்.

ஈரான் இயக்கங்கள் சாதாரணத் துப்பாக்கிகள் வாங்கவே சிரமப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. நாட்டுத்துப்பாக்கிகள்தான். கையெறி குண்டுகள்தான். பெரும்பாலும் பெட்ரோல் குண்டுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தீவிரவாதம் வளர்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, ஒசாமாவின் நல்லுறவு தங்களுக்கு மிகப்பெரிய லாபம் என்று அவர்கள் நினைத்ததில் வியப்பில்லை.

மிகப்பெரிய லாபம், அதைக்காட்டிலும் பெரிய சந்தோஷம் என்னும்போது, உதவிக்கரத்தை இன்னமும் கொஞ்சம் நீட்டலாமே?

"ஈரானில் அல் காயிதாவின் போராளிகள் பயிற்சிக்கு வருவதை வரவேற்கும் விதத்தில், ஈரான் அரசின் மறைமுக ஆதரவை அல் காயிதாவுக்குப் பெற்றுத்தரும் பொறுப்பு எங்களுடையது" என்று அறிவித்தார்கள், ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்பினர்.

இது சிக்ஸர். அமைப்புகளின் ஆதரவு எங்கே, அரசின் ஆதரவு எங்கே? ஒசாமாவுக்குச் சட்டென்று புரிந்துவிட்டது. மிகச்சிறிய தூண்டிலே போதும். விழப்போவது மீன்கள் இல்லை, திமிங்கிலங்கள்.

ஆகவே தன் திட்டத்தை இன்னும் கொஞ்சம் விஸ்தரித்தார் ஒசாமா.

ஈரானியத் தீவிரவாத அமைப்புகள் அப்போது அதிகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்த ஏரியா, இஸ்ரேல். பாலஸ்தீன் போராளி அமைப்புகளுக்குத் துணை அமைப்புகள் போலத்தான் அவை செயல்பட்டுக்கொண்டிருந்தன. இஸ்ரேல் இலக்குகளைத் தாக்குவது, கொரில்லா யுத்தங்களின்போதும் இண்டிஃபாதா போராட்டங்களின்போதும் பி.எல்.ஓ., ஹமாஸ் போன்ற இயக்கங்களுக்குப் பக்கபலமாக நின்று உதவுவது போன்ற காரியங்களைச் செய்துவந்தார்கள்.

ஒசாமா அவர்களிடம் ஒரு வாக்குறுதியை அளித்தார். ஈரான் குழுக்களிடம் பயிற்சி பெறும் அல் காயிதா போராளிகள், பயிற்சி முடிந்ததும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்குமே அனுப்பிவைக்கப்படுவார்கள். இஸ்ரேலில் களப்பணியாற்றும் ஈரானியக் குழுவினருக்கு உதவிகள் செய்வதே அவர்களது தலையாய பணியாக இருக்கும். இதன்மூலம் பாலஸ்தீன் சகோதரர்களுக்கு அல் காயிதாவின் நேரடி ஆதரவும் உதவியும் இருக்கும் என்பது நிலைநிறுத்தப்பட்டுவிடுகிறது அல்லவா? தவிர, அந்த உதவிகள் ஈரானியக் குழுக்களின் மூலமாகவே செய்யப்படுகிறது என்னும்போது அவர்களின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

மெய்சிலிர்த்துவிட்டன ஈரான் அமைப்புகள். உடனடியாக இந்தத் தகவல், ஈரான் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. முதலில் ஈரானின் அரசு அதிகாரிகளால் இதனை நம்பமுடியவில்லை. சன்னி இயக்கமான அல் காயிதா, ஈரான் போராளி இயக்கங்களுடன் நட்புறவு கொள்வதாவது என்று சந்தேகத்துடன்தான் பார்த்தார்கள். ஆனால் கார்ட்டொம் மாநாடுகள் முடிவடைந்து, ஈரான் போராளிகள் ஊர் திரும்பும்போதே ஆப்கனிஸ்தானில் இருந்து ஒரு பெரிய அல் காயிதா படை

ஈரானுக்கு வந்து சேர்ந்தது, அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

ஒசாமா உண்மையாகத்தான் நல்லுறவு கொள்ள விரும்புகிறார் என்பதை உறுதிசெய்துகொண்ட ஈரான் அரசு, தன் பங்குக்கு இன்னொரு 'வரத்தை' அல் காயிதாவுக்கு அளித்தது.

ஈரானின் தோழமை தேசம் லெபனான். ஹெஸ்புல்லாவின் லெபனான். உடனடியாக லெபனான் அரசுடன் ஈரான் கலந்துபேசி, அல் காயிதாவுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. ஒசாமாவும் ஈரான் அமைப்புகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் போலவே ஹெஸ்புல்லாவுடனும் சில ஏற்பாடுகள் செய்துகொள்ளவே, அவர்களுக்கும் உதவி செய்வதில் பிரச்னை ஏதுமில்லை என்றாகிவிட்டது.

ஆக, அல் காயிதா , சூடான், ஈரான், லெபனான் ரூ பாலஸ்தீன் என்றொரு புதிய கூட்டணி உருவாகிவிட்டது. இது மற்ற யாராலும் கனவில் கூட நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு கூட்டணி. மூன்று நாடுகளின் தீவிரவாத அமைப்புகளுடன் கூட்டணி வைப்பதன்மூலம், மூன்று அரசுகளின் ஆதரவை ஒரே சமயத்தில் அல் காயிதா பெற்றது என்பதை நம்புவது, இந்தியச் சூழலில் கொஞ்சம் சிரமமானதுதான். மத்தியக் கிழக்கின் அன்றைய அரசியல் சூழ்நிலை அப்படிப்பட்டது. பெரும்பாலான அரசுகளை இத்தகைய இயக்கங்கள்தான் அன்று போஷித்து, ஆதரித்து நடத்திவந்தன என்றால் நம்பித்தான் ஆகவேண்டும்.

அரசுகளுக்குத் தீவிரவாத இயக்கங்களின் உதவி வேண்டியிருந்தது. இயக்கங்களுக்கு அரசுகளின் ஒத்துழைப்புப் பல வகைகளில் தேவையாயிருந்தது. ஆக, ஒன்றை ஒன்று சாராமல் ஒரு பருப்பும் வேகாது என்கிற நிலைதான். குறிப்பாக லெபனான், பாலஸ்தீன், சிரியா, ஈரான், ஜோர்டன், ஏமன் போன்ற தேசங்களில், அரசு இயந்திரம் இயங்கியதே இத்தகைய இயக்கங்களைப் பராமரிப்பதற்குத்தான் என்று சொல்லிவிடலாம். பதிலுக்கு ஒரு ராணுவத்தால் தரமுடியாத பாதுகாப்பை இந்த இயக்கங்கள் அந்தந்த நாட்டு அரசுகளுக்கு வழங்கிக்கொண்டிருந்தன.

மற்ற இயக்கங்களைக் குறித்து விரிவாகப் பார்க்கும்போது, இந்த விஷயத்தை விளக்கமாகப் புரிந்துகொள்ள முடியும். இப்போது மீண்டும் சூடான், மீண்டும் அல் காயிதா.

ஈரான் மற்றும் லெபனானின் அதிகாரபூர்வ ஒத்துழைப்பு அல் காயிதாவுக்குக் கிடைத்ததை அடுத்து, சூடான் அதிபர் அசன் அல் துராபி மிகத் தீவிரமாக ஒரு தீவிரவாத அமைப்பின் தலைவர் போலவே திட்டங்கள் தீட்ட ஆரம்பித்துவிட்டார்.

இரண்டு ஷியா தேசங்கள் முன்வந்து உதவ முடிவு செய்திருப்பதை எடுத்துக் காட்டி, நாம் ஏன் ஏனைய அனைத்து மத்தியக் கிழக்கு தேசங்களையும் உதவிக்கு அழைக்கக் கூடாது? அதாவது, 'அஃபிஷியலி ஸ்பான்ஸர்டு தீவிரவாத இயக்கமா'க அல் காயிதாவை முன்னிறுத்த ஏதாவது செய்யமுடியுமா என்று யோசித்தார் துராபி. ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு தேசங்களும் தங்களது சம்பளம் வாங்காத எக்ஸ்டிரா ராணுவமாக அல் காயிதாவை நியமித்துக்கொள்வது. பதிலுக்கு அல் காயிதா அந்தந்த தேசங்களில் சுதந்தரமாக இயங்குவதற்கும் ஆயுதப் பரிமாற்றங்கள் உள்ளிட்ட பிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் மறைமுகமாக உதவுவது.

ஒசாமா புன்னகை செய்தார். ஏனெனில், துராபிக்குத் தெரியாத சில விஷயங்கள் இருந்தன. சவூதி அரேபியா நீங்கலாக, அத்தனை மத்தியக் கிழக்கு தேசங்களுமே அப்போது அல் காயிதாவை மறைமுகமாக ஆதரித்துக்கொண்டுதான் இருந்தன. ஆகவே, அத்தனை தேசங்களும் அல் காயிதாவைப் போலவே சவூதி அரேபியாவை அமெரிக்க அடிவருடி தேசமாகவே பார்த்துக்கொண்டும் இருந்தன. அமெரிக்காவுக்கு எதிராக அல் காயிதா நிகழ்த்த இருந்த யுத்தத்தைப் போல, சவூதி அரேபியாவுக்கு எதிராகவும் ஒரு போரைத் தீர்மானித்தால், அதற்கும் மறைமுக ஆதரவு தர அத்தேசங்கள் தயாராக இருந்தன.

இதற்கெல்லாம் பதிலாக ஒசாமா, அவர்களுக்குச் செய்யக்கூடிய விஷயங்கள் என்ன?

இதனை ஆராயப் புகுந்தால் மத்தியக் கிழக்கின் எண்ணெய்ப் பொருளாதாரத்தில் கொண்டுபோய் நிறுத்தும். அமெரிக்கா உறிஞ்சிக் குடிக்கத் திட்டமிட்டிருந்த சவூதி அரேபியாவின் எண்ணெய் வளத்தை, சிரியா, ஜோர்டன், பாலஸ்தீன் போன்ற அத்தனை பணக்காரத்தனமில்லாத தேசங்களுக்குப் பகிர்ந்து வழங்க முடியும் என்றொரு யோசனை ஒசாமா பின்லேடனுக்கு இருந்தது. என்னதான் தாய்நாடென்றாலும் சவூதி அரேபியா இப்போது எதிர்க்கட்சி தேசமாகிவிட்டபடியால், ஆத்மசுத்தியுடனேயே இதனை அவரால் சிந்திக்க முடிந்தது.

குறிப்பாக, இஸ்ரேலுடன் பாலஸ்தீனியர்கள் நடத்திக்கொண்டிருந்த யுத்தம் பெரிய அளவில் வெற்றி பெற முடியாமலிருந்ததற்குப் பணப் பஞ்சம்தான் காரணம். பல நட்பு இயக்கங்களின் உதவியுடன்தான் பாலஸ்தீன் போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தது. சுற்றியுள்ள தேசங்களின் ஆதரவு கொஞ்சம் இருந்ததால். வேளைக்குச் சாப்பிட்டுக்கொள்ள மட்டும் முடிந்தது. சவூதி அரேபியாவின் எண்ணெய் வளத்தை ஓரளவு கொள்ளை கொள்ள முடிந்தால், இந்தப் பிரச்னையைப் பெருமளவில் தீர்க்கலாம் என்று சொல்லி, அதற்கொரு ப்ளூ ப்ரிண்ட்டும் தயாரித்திருந்தார் ஒசாமா.

இது அன்றைக்கு அத்தனை மத்தியக் கிழக்கு தேசங்களுக்கும் உவப்பான விஷயமாக இருந்தது. அப்படி சவூதியுடன் யுத்தம் என்று ஒன்று வருமானால் ஈராக்கின் உதவியும் இருக்கும் என்று அவர்கள் கணக்கிட்டார்கள்.

இதெல்லாமே நீண்டநாள் திட்டங்கள்தான். ஆனால் உடனடியாக அல் காயிதாவுக்குச் சாத்தியமான விஷயம், அந்த தேசங்களின் நட்பு. மற்றும் உதவிகள். பொருளுதவி. ஆயுத உதவிகள். பயிற்சியளிக்கும் விஷயங்களில் கிடைத்த உதவிகள். விசா, பாஸ்போர்ட் தொந்தரவுகள் இல்லாமல் எங்கு வேண்டுமானாலும் பறந்துபோய்க் காரியத்தை முடித்துவிட்டு வரக் கிடைத்த அனுமதி உதவி.

சுருக்கமாகச் சொல்வதென்றால், துராபி செய்துவந்தவற்றையேதான், மத்தியக்கிழக்கு தேசங்களும் அன்றைக்கு அல் காயிதாவுக்குச் செய்துவந்தன.

ஆனால், அந்த தேசங்கள் அனைத்தும் தப்பித்துவிட்டன. துராபி மட்டும் ஒரு கட்டத்தில் மாட்டிக்கொண்டார்.